செய்தி வெளியீடு எண்: 598 நாள்:16.09.2019

# பத்திரிக்கை செய்தி

சென்னை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கூட்ட அரங்கில், **மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல்** அவர்கள் தலைமையில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் 30வது கூட்டம் 16.09.2019 இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான மாதிரி நலத்திட்டம் (Model Scheme of Government of India) அடிப்படையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை 1–ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை புதியதாக வழங்குவது; 10–ம் வகுப்பு முதல் உயர் கல்வி வரை ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் உதவித்தொகைகளை உயர்த்தி வழங்குவது, இயற்கை மரண உதவித்தொகையினை ரூ.20,000/–லிருந்து ரூ.2,00,000/–ஆக உயர்த்தி வழங்குவது; விபத்து மரண உதவித்தொகையினை (பணியிடம் தவிர) ரூ.1,00,000/–லிருந்து ரூ.4,00,000/–ஆக உயர்த்தி வழங்குவது; முடக்க ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், கண்கண்ணாடி ஆகிய திட்டங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித்தொகைகளை உயர்த்தி வழங்குவது ஆகியவை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அவர்தம் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்குவது தொடர்பாக, ஏற்கனவே, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 3 நகரும் மருத்துவ வாகனங்கள் செயல்பட்டு வருகிறது. இதன் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு கூடுதலாக சென்னை பெருநகரத்திற்கு 15 வாகனங்களும், இதர மாவட்டங்களுக்கு 32 வாகனங்கள் நகரும் மருத்துவமனை வாகனங்கள் என மொத்தம் 50 எண்ணிக்கையில் ரூ.18.28 கோடி செலவினத்தில் நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்த அரசாணை (நிலை) எண். 65, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஐ2) துறை நாள்.30.05.2019 அரசாணை வெளியிடப்பட்டதற்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

**16.05.2011 முதல் 31.08.2019 வரை 9,52,061** கட்டுமானத் தொழிலாளர்கள் புதிதாக **பதிவு** செய்யப்பட்டு மொத்தம் **13.02** இலட்சம் **பயனாளி**களுக் **ரூ.537.25 கோடி** செலவில் **நலத்திட்ட உதவிகள்** வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் **தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப.,** தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல **வாரிய செயலாளர் திரு.தி.குமரன்,** வாரிய பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**